ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ரு. விபவஸூ வைகாசிமீ பகுதி ௬
Vol 5. May & June 1928. No. 4

## பாகவதாபசாரம்.

அபசாரம் பலவற்றுள்ளும் பாகவதாபசாரமே மிகவும் க்ரூரமாமாதலால் அவ்வபசாரம் வாராதபடி வாழவேண்டியதே ஸ்ரீவைஷ்ணவாதிகாரிகட்கு முக்ய கடமையாமென்பதைக் குறித்து ஸகல சேதநோஜ்ஜீவநகாமரான ஸ்ரீபிள்ளைலோகாசார்யர் தமது பரமக்ருபையாலே திருவாய் மலர்ந்தருளிய பதினெண்ரஹஸ்யங்களுள் ஒன்றாகிய ஸ்ரீ வசனபூஷணமென்ற திவ்பசாஸ்த்ரத்தில் அதிகாரி நிஷ்டாப்ரகரணத்தில் "நாமரூபங்களையுடையராய்" என்று தொடங்கி, "இவ்வர்த்தம் கைசிகவிருத்தாந்தத்திலும், உபரிசரவசு வ்ருத்தாந்தத்திலும் காணலாம்" என்பதிறுதியாகப் பாகதாபசாரத்தின் ஸ்வரூபமும், அதன் க்ரூரத்தன்மையும், அதற்குக்காரணமும் அதன் கார்யமும் அதற்குச் சாஸ்த்ரப்பிரமாணமும், ஆப்த வசனமும், த்ருஷ்டாந்தங்களும் நன்கெடுத்து விளக்கி விரிவாக அருளிச்செய்துள்ளார். அவை:—

"நாமரூபங்களையுடையராய்ப் பாகவத விரோதம் பண்ணிப் போருமவர்கள் தக்த படம்போலே. மடிப்புடவை வெந்தால் உண்டையும் பாவும் ஒத்துக்கிடக்கும்; காற்றடித்தவாறே பறந்துபோம். 'ஈசுவரன் அவதரித்துப்பண்ணின ஆனைந்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை' என்று ஜீயர் அருளிச்செய்வர். 'அவமானக்ரியா' பாகவதாபசாரந்தான் அநேகவிதம், அதிலேயொன்று அவர்

கள் பக்கல் ஜன்மநிரூபணம் இதுதான் அர்ச்சாவதாரத்தில் உபாதா னஸ்ம்ருதியிலுங்காட்டில் க்ரூரம். அத்தை 'மாத்ருயோநி பரீக்ஷை யோடொக்கும்' என்று சாஸ்த்ரம் சொல்லும். திருசங்குவைப் போலே கர்மசண்டாளனாய் மார்பிலிட்ட யஜ்ஞோபவீதந்தானேவர் ராய்விடும். ஜாதிசண்டாளனுக்கு காலந்தரத்திலே பாகவதனு கைக்கு யோக்யதையுண்டு; அதுவுமில்லை இவனுக்கு. ஆரூடபதித னுகையாலே. இது தனக்கு அதிகாரி நியமமில்லை. 'தமர்களில் தலை வராய சாதிபந்தணர்களேலும்' என்கையாலே. இவ்விடத்திலேவை நதேயவ்ருத்தாந்தத்தையும், பிள்ளைப்பிள்ளையாழ்வனுக்கு ஆழ்வான் பணித்த வார்த்தையையும் ஸ்மரிப்பது. ஜ்ஞாநாநுஷ்டானங்களை யொழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள் பக்கல்ஸம்பந்தமேயமைகிறுப் போலே, அவையுண்டானாலும் இழவுக்கவர்கள் பக்கம் அபசாரமே போரும். இதில் ஜன்மவ்ருத்தாதி நியமமில்லை. இவ்வர்த்தம் கைசிக விருத்தாந்தத்திலும் உபரிசரவசு வ்ருத்தாந்தத்திலும் காணலாம் என்பனவாம்.

இனி, இங்கு இவ்வாக்ய மொவ்வொன்றிற்கும், விசதவாக் சிகாமணியாகிய ஸ்ரீமணவாளமாமுனிகளருளிச்செய்த வ்யாக்யா னத்தைத்தழுவி உரை எழுதப்படுகின்றன.

"இவையிரண்டும் ஸ்வரூபேணமுடிக்குமளவன்றிக்கே பாக வதவிரோதத்தையும் விளைத்துமுடிக்கும்." என்று பாகவதாபசாரத் திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது. பின்வருகிற வாக்யங்களால் பாகவதாபசாரம் விவரிக்கப்படுகிறது. இங்கு 'இவையிரண்டும்' என்ற சுட்டு அஹங்காரம் காமம் என்ற இரண்டையும் உணர்த்தி நின்றது. 'ஸ்வரூபேணமுடிக்குமளவின்றிக்கே பாகவதவிரோதத் தையும் விளைத்துமுடிக்கும்' என்றது அவைதாம் (அஹங்காரம் காமம்) ஸாக்ஷாத்காரணமாய் நின்று விநாசத்திற்குக் காரணமாகிய பாகவதாபசாரத்தையுமுண்டாக்கி அழிக்குமென்றவாறு.

(1) நாமரூபங்களையுடையராய்ப் பாகவதவிரோதம்பண்ணிப்

(1) (நாமரூபங்களை யுடையராய்' என்று தொடங்கிய) இவ்வாக்யம், பாகவதாபசார முண்டான காலத்திலே நாசமுண்டாகுமாகில் பாகவதாப சாரப்பட்ட பின்பும் நாமரூபங்களையுடையவராய் வாழுதல் எங்ஙனம் பொருந் தும்? என்ற ஆசங்கையை அநுவதித்து அதைப்பரிஹரிக்கத் தோன்றிய

போருமவர்கள் தக்தபடம்போலே. (2) மடிப்புடவை வெந்தால் உண்டையும் பாவும் ஒத்துக்கிடக்கும். காற்றடித்தவாறே பறந்து போம்.

(3) "ஈசுவரனவதரித்துப் பண்ணின ஆனைத்தொழிகளெல்லாம் பாகவதாபசாரம் பொறுமை" என்று ஜீயரருளிச்செய்வர்.

---

தாம். நாமரூபங்களையுடையராய் என்பது தாஸ்ய நாமத்தையும் அதற்கிசைந்த திருவிலச்சினை, புண்ட்ரங்களையுடையராய் என்றவாறு. பாகவத விரோதம் பண்ணிப்போருமவர்கள் என்பது அஹங்காரத்தின் வசப்பட்டு அதனால் பாகவதரிடத்தில் அபசாரப்படுமவர்கள் என்றவாறு. தீப்பட்டு வஸ்திரம் தன்னுருவழிய வெந்திருக்கச்செய்தே அது,உருவுடையதுபோலக் காணப்படுவதுபோல பாகவதாபசாரப்பட்டவர்கள் அதனால் ஸத்தையழிந்திருக்கச்செய்தேயும்தோற்றமாத்திரத்தால் ஸத்தையுடையவர்போலக்காணப்படுவர் என்றவாறு.

(2) ('மடிப்புடவை வெந்தால்' என்று தொடங்கிய) இவ்வாக்யம், முற்கூறிய திருஷ்டாந்தத்தின் பொருளை விளக்குகிறது. மடிக்கப்பட்டுள்ள வஸ்திரம் ஒவ்வொரு மடிப்பிலும் வெந்திருக்கச்செய்தேயும் குறுக்கிழையும், நெட்டிழையும் தீக்கோட்படாமுன்னிருந்ததுபோலிருக்கும்; இது தீக்கோட்பட்டதென்பது காற்றடித்துச்சிதறிப்போம் நிலைகண்டு அநுமிக்கப்படும். அங்ஙனமே பாகவதாபசாரமாகிய க்ரூராக்னியால் தகிப்புண்டு நாமரூபங்களோடே யிருக்கின்றவர்களும் பகவந்நிக்ரஹத்தால் தாக்குண்டு உருவழிந்து போவர்களென்பது கருத்தாகக்கொள்க.

(3) ('ஈசுவரனவதரித்து' என்று தொடங்கிய) இவ்வாக்யம், பகவதபசாரப்பட்டவர்கள் பகவந்நிக்ரஹத்திற்கு அவசியமிலக்காவரென்பது நியமமுண்டோ? என்ற சங்கையை அநுவதித்து அதைப்பரிஹரிக்கவந்த ஆப்தவசனமாம். ஈசுவரனவதரித்துப்பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் என்பது ஸங்கல்ப மாத்திரத்தாலே எல்லாம் செய்யவல்ல ஸர்வேசுவரன் தன்னியல்பை மாற்றித்தன்னின்வேறான மனிதர் முதலானரோடு சமமாக அவதரித்து ஹிரண்ய ராவணாதியரோடு நேர்நின்று யுத்தஞ்செய்து அவர்களையழித்த அதிமானுஷ சேஷ்டிதமெல்லாம் (மனிதரால் செய்யவொண்ணாத வியாபாரமெல்லாம்) என்றவாறு. பாகவதாபசாரம் பொறுமை என்று ஜீயரருளிச்செய்வாரென்பது ப்ரஹ்லாதன், மகருஷி முதலான பாகவதரிடத்தில் ஹிரண்ய ராவணாதியர் செய்த அபசாரம் பொறுமையாலே என்றுஆப்ததமரான நஞ்சீயர் அருளிச்செய்வாரென்றவாறு.

(4) "அவமாநக்ரியா" (5) பாகவதாபசாரந்தான் அநேகவிதம். (6) அதிலேயொன்று அவர்கள்பக்கல் ஜந்மநிரூபணம்.

---

(4) "அவமாநக்ரியா" என்ற இது, பாகவதாபசாரத்தின் கொடுமையைத் தெரிவிக்கிற பகவத் வசனமாம். அதாவது:— "𑌯𑌾 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑍍𑌮𑌯𑌿 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌸𑌦𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 । 𑌅𑌵𑌮𑌾𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌂𑌹𑌰𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌂 𑌜𑌗𑌤𑍍" யாப்ரீதிர்மயி ஸம்வ்ருத்தா மத்பக்தேஷு ஸதாஸ்துதே, அவமாநக்ரியா தேஷாம் ஸம்ஹரத்யகிலம் ஜகத்" என்பதாம். இந்தச்சுலோகத்தில் பூர்வார்த்தத்தால் பாகவத விஷயத்தில் பகவத் விஷயத்திற் செய்யுமளவாகிலும் பக்தி செய்யவேண்டும்; என்று சொல்லப்படுகிறது, உத்தரார்த்தத்தாலே அவ்வாறு செய்யாதொழிவதாலுண்டாகும் அநிஷ்டம் சொல்லப்படுகிறது.

'யாப்ரீதி:' 'ப்ரியோஹிஜ்ஞாநிநோத்யர்த்தம் (ஜ்ஞாநிக்கு மிகவும் பிரியமுள்ளவன்) என்றபடி ஸர்வஜ்ஞனுய் ஸர்வசக்தியாயுள்ள என்னுலும் அளவிட்டுச் சொல்லப்போகாத யாதொரு அளவான பக்தியானது; (அப்பெரிய விஷயத்திற் செய்யும் ப்ரீதியே பக்தியாம்) 'மயி' குளப்படியிலே கடலைப்புகுத்தாப்போலே இந்த பக்தியினுடைய ஏகதேசாம்சத்தையும் உண்டறுத்துக்கொள்ளமாட்டாதேயிருக்கிற என் விஷயத்திலே; 'மத்பக்தேஷு' விபூதிமானுன என்னுடைய பிரீதியுங்கூடக்கடலிட்ட காயமாம்படி "யான் பெரியன் நீ பெரியை யென்பதனை யாரறிவார்" என்றபடி அறப்பெரியருமாய், "𑌮𑌮 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍" மமமத்பக்த பக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத்" (என்று என்னுடைய பக்தரிடத்திற்செய்யும் ப்ரீதியானது மிகவும் சிரேஷ்டமாம்) என்றபடி பக்திக்கு வகுத்த விஷயமுமான பாகவதர்களிடத்திலே; 'ஸதாஸ்துதே' இடைவிடாத பக்தி யுண்டாகுக; இனி பாகவத விஷயத்திற்குத்தகும்படி பக்தி செய்யாதொழிந்தாலும் ஈசுவரனிடத்திற் செய்யும் பக்தியளவாவது செய்யாத போதுண்டாம் அநர்த்தம்சொல்லப்படுகிறது. 'தேஷாம் அவமாநக்ரியா' பக்திசெய்யவேண்டும் விஷயத்தில் அது செய்யாதொழிகை அவமானமன்றோ; ஆகையால் பாகவதர்களை நினையாதொழிகையும் அபசாரமாம். அவ்வபசாரம் 'அகிலம் ஜகத்ஸம்ஹரதி' பிரஹ்ம வித்துக்களாகிய பாகவதர்களை அவமானம் செய்தவர்களின் ஸம்பந்தமுள்ள எல்லா வஸ்துக்களையும் மீளவும் சிருஷ்டிப்பதற்கு யோக்யதையொழிய ஸூக்ஷ்மாம்சமுமில்லாதபடி ஸம்ஹரிக்கும் என்பதாம்.

(5) (பாகவதாபசாரந்தான் அநேகவிதமென்ற) இவ்வாக்யம், முன்னுரைக்கப்பட்ட பாகவதாபசாரத்திற்குக் காரணம் பலபடி பட்டிருக்குமென்பதைத் தெரிவிக்கிறது. அநேகவிதமாவன. ஜன்மநிரூபணம் ஜ்ஞாநநிரூபணம், வ்ருத்தநிரூபணம், ஆகாரநிரூபணம், பந்துநிரூபணம், வாஸநிரூபணம் என்பனவாம்.

(6) ('அதிலேயொன்று' என்று தொடங்கிய) இவ்வாக்யம், இங்குரைக்கப்பட்ட பாகவதாபசாரங்களுள் ஜன்மநிரூபணமானது மிகவும் கொடியதாமென்பதைக் குறிப்பிடுகிறது, 'ஜன்ம நிரூபணம்' என்பது தாழ்ந்த ஜாதி

(7) இதுதான் அர்ச்சாவதாரத்தில் உபாதாந ஸ்மிருதியிலும் காட்டில் க்ரூரம். (8) அத்தை மாத்ருயோநி பரீக்ஷையோடொக்கும் என்று சாஸ்த்ரம் சொல்லும்.

தொடரும்.

---

யில் தோன்றிய பாகவதர்களை பகவத்ஸம்பந்தமடியாகவந்த அவர்துமஹாத்ம்யத்தை ஆராயாமல் உயர்ந்த வருணத்திற் பிறந்தவர்கள் புல்லறிவால் அவர்து ஜாதியின் திறத்தைக்கொண்டு தாழ்ந்தவராகக் கருதுகை என்றவாறு.

(7) ('இதுதான் அர்ச்சாவதாரத்தில்' என்று தொடங்கிய) இவ்வாக்யம், இந்த ஜன்ம நிருபணமாகிய பாகவதாபசாரத்தின் மிகுதிக்கு எல்லையின் க்ரூரத்தன்மையைச் சுட்டி யுணர்த்துகிறது. 'இதுதான்' என்பது பாகவத ஜன்ம நிருபணம் என்றவாறு. 'அர்ச்சாவதாரத்தில் உபாதானஸ்மிருதி'என்றது அடியவர் விரும்பி அர்ச்சிக்கின்ற விக்ரஹத்தை ஸர்வேசுவரன் தனக்குத் திருமேனியாகக்கொண்டு அதில் பரமபதத்தில் தனக்கு அசாதாரணமாயிருந்துள்ள திவ்யமங்கள விக்ரஹத்திற் செய்யும் விருப்பத்தைச்செய்து எழுந்தருளியிருக்கிற வைபவத்தை யறியாமல் புல்லறிவால் 'இவ்விக்ரஹம் செம்பு, பொன் முதலியவற்றாற் செய்யப்பட்டது' என்று நினைக்கை என்றவாறு. 'அதிற்காட்டில் க்ரூரம்' என்பது அங்ஙனம் நினைக்கின்றவர்களிடத்தில் ஈசுவரனுக்கு எவ்வளவு வெறுப்புண்டாகுமோ அதைக்காட்டிலும் மிகவும் வெறுப்பு, பாகவத ஜன்ம நிருபணம் செய்தவரிடத்திலுண்டாகும் என்றவாறு.

(8) ('அத்தை மாத்ருயோநி பரீக்ஷையோடொக்கும்' என்று தொடங்கிய) இவ்வாக்யம், பாகவதாபசாரத்தின் க்ரூரத்தன்மைக்கு எல்லை கூறப்பட்ட அர்ச்சாவதாரத்தின் உபாதாநஸ்மிருதியின் க்ரூரத்தன்மைக்கு மேற்கோளாமென்பதைத் தெரிவிக்கிறது. 'அத்தைமாத்ருயோநி பரீக்ஷையோடொக்குமென்று சாஸ்த்ரம் சொல்லும்' என்றது. "அர்ச்சாவதாரோபாதாநம் வைஷ்ணவோத்பத்தி சிந்தநம், மாத்ருயோநி பரீக்ஷாயா ஸ்துல்யமாஹுர் மநீஷிண:" "அர்ச்சாவதாரோபாதாநம் வைஷ்ணவோத்பத்தி சிந்தநம், மாத்ருயோநி பரீக்ஷாயா ஸ்துல்யமாஹுர் மநீஷிண:" என்றபடி அர்ச்சாவதார உபாதாநஸ்மிருதியும், பாகவத ஜன்ம நிருபணமும் என்ற இவ்விரண்டும் மாதாவின் அநிஹேயமான அவயவ விசேஷத்தைப் பரீக்ஷிப்பதாலுண்டாகும் பாபத்திற்கு ஒப்பாகிய பாபமாமென்று சாஸ்த்ரத்திற் சொல்லப்பட்டுளது என்றவாறு. இங்ஙனம் இவ்விரண்டையும் மாத்ருயோநி பரீக்ஷையோடொக்குமென்று சாஸ்த்ரம் கூறினும், மாத்ருயோநி பரீக்ஷையோடொக்குமென்பதை அர்ச்சாவதாரோபாதான ஸ்மிருக்கு மாத்திரம்

உவமையாகக்கொண்டு, பாகவத ஜன்ம நிரூபணம் அதினும் மிகவும்க்ரூரமாம் என்பது லோகதேசிகனது திருவுள்ளமாகக்கொள்க. ந்யாநுக்ரஹீத வசன தாத்பர்யஜ்ஞரான இவரது திருவுள்ளம் சாஸ்த்ரத்திற்கு விரோதமாகவிருக்குமோவென்னில்; இந்த சுலோகத்தில் * ‹‹ஶஹஸ்ரஹி தம் வ்ரூவம்›› “அப்யர்ஹிதம் பூர்வம்” என்ற நியாயப்படி அர்ச்சாவதார உபாதான மிஸ்ருதியை முற்கூறி, வைஷ்ண வோத்பத்தி சிந்தனத்தைப் பிற்கூறியதினல் இது மிகவும் க்ரூரமென்றறியக்கிடக்கிறது. அப்யர் ஹிதத்வமாவது பூஜ்யத்வம். தோஷத்திற்கு பூஜ்யத்வம் க்ரூரத்தன்மையின் ஏற்றத்தாழ்வைப்பற்றியதாயிருக்கும். ஈண்டு அர்ச்சாவதாரத்தின் உபாதானஸ்மிருதி க்ரூரத்தின் குறைவுபாடுடைமைபற்றிப் பூஜ்யமாயிற்று. அதனுல் இது முற்கூறப்பட்டது. வைஷ்ணவவோத்பத்தி சிந்தனம் மிகவும் க்ரூரமுடையதால் பூஜ்யமன்ருயிற்று. அதனுல் இது பிற்கூறப்பட்டது. இஃதன்றியும் அக்ருத்த காணத்தை (செய்யத்தகாததைச் செய்வதை) நோக்கப்பகவதபசாரமும், பகவதபசாரத்தைநோக்கிப் பாகவதாபசாரமும் விஷயகௌரவம்பற்றி ஒன்றற்கொன்று க்ரூரமுடையதாயிருக்குமன்ரே! இன்னும்,

* “அப்யர்ஹிதம்பூர்வம்” என்பது “சிறைப்புடைப்பொருளை முற்படக்கிளத்தல்” என்ற சூத்திரத்தோடு ஒருபொருளுடையது.

ஶவராயஶதம் லக்ஷம் ஐஐ நித்யக்ருதம் ஹவெத்।
க்ஷாமெ்யெகெந வக்ஷெந ஜாதிவுஷெந வாவஞ்ந:॥
ஐக்தம் ஶ்வவசம் வாவி நிஞாம் குர்வந்தி யெநரா:।
வக்ஷகொடிஶதெநாவி நக்ஷாமி வஸுந்தரெ॥

அபராதசதம் லக்ஷ்ம்மம நித்யக்ருதம் பவேத்
க்ஷ்மாம்யேகேந பத்மேந ஜாதிபுஷ்பேந வாபுந:
மத்பக்தம் ச்வபசம் வாவி நிந்தாம் குர்வந்தி யேநரா:
பத்மகோடிச தேநாபி நக்ஷ்மாமி வஸுந்தரே.

வராக நாயனர் பூமிப்பிராட்டியை நோக்கி ஹெவஸுந்தரே! என் விஷயத்தில் நாடோறும் கணக்கற்ற குற்றத்தைச்செய்தாலும் ஒரு புஷ்பார்ச்சனையினல் அக்குற்றங்களெல்லாவற்றையும் பொறுத்துக்கொள்வேன். என்னுடைய பக்தன் மிகவும் இழிந்தவனுயினும் அவன் விஷயத்தில் நிந்தனை செய்தவர்கள் என்னைக்கணக்கற்ற புஷ்பங்களைக்கொண்டு ஆராதித்தாலும்அவர்கள் செய்த குற்றங்களை ஒருபோதும் பொறுக்கமாட்டேன் என்று அருளிச்செய்தார். லோகதேசிகன் இவற்றையெல்லாம் உட்கொண்டு ‘பாகவதாபசாரம் அதினும் க்ரூரம்’ என்று திருவுள்ளம் பற்றினுாதலால் இவரது திருவுள்ளம், சாஸ்த்ரார்த்தத்தோடு இயைபுடையதென்பது தெளிவாம். மாத்ருயோநி பரீக்ஷை’ என்பது தர்வாசனையாலே அன்னிய மாதரின் அதிநிஹீநமான அவயவ விசேஷத்தைப் பரீக்ஷிப்பதுபோலத் தன்னை அருமையாக ஈன்றெடுத்த மாதாவின் அதிநிஹீநமான அவயவ விசேஷத்தையும் பரீக்ஷிக்கை என்றவாறு.

ஸ்ரீ:

# ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரம்.

(66-ம் பக்கத்தொடர்ச்சி.)

அவர்கள், சரீரமென்று பேசக்கூசியதற்குக் கருத்துயாதெனின்; சரீரம், கர்மபலபோகத்திற்கு ஏற்பட்டதாயிருக்கும். ஆகையால் கர்மபலபோகார்த்தத்வமே சரீரலக்ஷணமாகும். அப்படிப்பட்ட சரீரம் ஈசுவரனுக்குண்டென்று கொண்டால் அவனுக்கும் கர்மபலாநுபவம் உண்டெனக் கொள்ளவேண்டிவரும். அங்ஙனம் கொள்ளும்போது ஈசுவரனாயிருப்பது பொருந்தாதென்பதாம். ஸ்ரீபாஷ்யகாரர் ஐயோ! தலைவிதியே! ஈதென்னபாவம்! தலைக்குத் தக்கவாறன்றோ குல்லாய் தைக்கவடுப்பது. குல்லாய் தைத்து அதற்குப் பொருந்தவில்லையென்று தலையைச் சீவுவாருண்டோ? என்று வெறுத்துச் சரீரலக்ஷணத்தை ஒருவாறு காட்டித்தந்தார். அதாவது:— இங்கு, கர்மபலபோகார்த்தத்வம் சரீரலக்ஷணமாகக் கொள்ளலாகாது. முக்தர்கள், ஸ்வேச்சையால் அநேக சரீரபரிக்ரஹம் பண்ணுவது கர்மபலாநுபவத்திற்காகவன்று. இனி, இந்திரியங்களுக்கு ஆசிரயம் சரீரமென்றேனும், கரசரணாதியுடையதாயிருப்பது சரீரமென்றேனும் கொள்ளலாகாது. பசுபக்ஷி விருக்ஷமநுஷ்யாதி விசித்ர ஸந்நிவேசமுடைய சரீரங்களுக்குப் பொருந்தாமையாலே. ஆகையால் சரீரமாக வ்யவஹரிக்கப்படுமவற்றுக்கெல்லாம் பொருந்தும்படி லக்ஷணம் கட்டுவதே தகுதியாகும்.

சுருதியில் "யஸ்யாத்மாசரீரம்" இத்யாதியால் வ்யவஹரிக்கப்பட்ட சரீரசப்தத்திற்குக் கௌணத்வகல்பனம் அசங்கதம். ஆகலால் சரீரலக்ஷணம் இங்ஙனம் கொள்ளவேண்டும். அதாவது எவனுக்கு எந்தவஸ்துவானது எவ்வகையாலும் பிரிவின்றி அவனாலே தரிக்கப்பட்டு அவனுக்கே சேஷமாயிருக்குமோ அது அவனுக்குச் சரீரமாகும் எனக்கொண்டால் ஒருகுறையும் வராது. எவ்விடத்தும் பொருந்தும். அப்படியாகும்போது சேதநாசேதனங்களடங்கலும், ஈசுவரனாலே தரிக்கப்பட்டு, அவனோடு ஒருசமயமும் பிரி

வின்றி அவனுக்கே சேஷமாயிருப்பதுகொண்டு அவைகளை அவனுக் குச் சரீரமாகக்கொள்ளக் குறையில்லை; என்று சரீரலக்ஷணத்தைக் காட்டித்தரவே எல்லாம் பொருத்தமுடையவாயின.

ஆக இப்படி சரீரசரீரிபாவ ஜ்ஞானத்தில் உண்டான அருமையை நினைத்து 'ச்ரத்தயா தாரயேத்' என்று சொல்லப்பட்டது. 'யஸ்து' என்கிற ஏகவசனத்தால் அப்படி சரீரசரீரிபாவ ஜ்ஞானம் நமக்குண் டான தேகாத்ம விவேகம்போல அநுஷ்டானோபயோகி யாகாதிருக் கையன்றிக்கே அதின்பலம் கைபுகும்வரை அதில் ஊன்றி நிற்குமதி காரி தௌர்லப்யம் சொல்லப்பட்டது. இப்படி நிஷ்க்ருஷ்ட ஜ்ஞா நம் கைபுகுந்தவாறே தன்னடைவே வரும் அதின் பலத்தைக் காட்டு கிறது; 'க்ஷேமம் கச்சேதகிஞ்சந:' என்பது. "அகிஞ்சந: நாஸ்தி கிஞ்சந ப்ரார்த்தநீயம் யஸ்ய" என்று வீரராகவீய வ்யாக்யானமிருப் பது. அதாவது ப்ரயோஜநாந்தர சூந்ய: என்பதாம். அது பொருந் தாது. சரீரசரீரிபாவ நிஷ்க்ருஷ்ட ஜ்ஞாநமில்லாவிடிலும், மோக்ஷாபி ருசியுண்டாயிருக்கும்; ப்ரயோஜநாந்தர சூந்யதை விளையக்கூடிய தாகையாலே; அதுக்குச் சரீரசரீரிபாவ ஸம்பந்தஜ்ஞாநம் வேண்டிய தில்லை. இப்படிப்பட்ட ஸம்பந்தஜ்ஞாநத்தை ஒத்துக்கொள்ளாத வைதிகர் முதலானோரும் மோக்ஷாபிருசியுண்டாம்போது, ப்ரயோஜ நாந்தரத்தில் நசைபற்றபடியை ஒப்புக்கொண்டிருப்பதையும் காண லாம்.

பொதுவாக 'அகிஞ்சந:' என்கிற வ்யவஹாரம் தரித்திரனுக்கு ஏற்பட்டதாயிருக்கும். அப்போது சுகஸ்பானமான தனுதிகளில் லாமையைக் காட்டுமதொழிய சுகத்தில் நசையற்றபடியைக் காட் டாது. அதுபோல இங்கும் ப்ரார்த்தநீய வஸ்துவுக்கு ஸாதனமில் லாமையைக் காட்டுமதொழிய ப்ரார்த்தநீயத்தில் நசையற்றபடியைக் காட்டாது. 'அகிஞ்சந: க்ஷேமம் கச்சேத்' என்றால் மோக்ஷஸாத நம் இல்லாதிருந்தும் மோக்ஷத்தை யடைவானென்பதே வாக்ய ஸ்வாரஸ்யத்தால் கிடைப்பதாகும். ஆகையால் 'அகிஞ்சந' பதம், மோக்ஷத்திற்குச் சாதனமான உபாயாந்தரமில்லாமையாகிற தாரித் ர்யத்தைச் சொல்லியதாகும். இப்படிப்பட்ட ஆகிஞ்சந்யம் வருகைக் கடி ஈசுவரனுக்கும் இவனுக்குமுள்ள அநாதிஸம்பந்த ஜ்ஞாநமாகை யாலே அதடியாக உபாயாந்தரங்களில்லை என்றால் உபாயாந்தர

யோக்யதையே இல்லையென்றபடியாம். ஆக உபாயாந்தர ப்ரவ்ருத்தி யோக்யதையில்லாதிருக்கிற தன்மையே இவனுக்கு ஸ்வரூபமென்பது விளங்குகிறது.

ஆக நிஷ்க்ருஷ்ட ஸம்பந்தஜ்ஞாநம் வரவே நிஷ்க்ருஷ்ட ஸ்வரூபஜ்ஞாநம் தலையெடுக்கும். ஆக, 'அகிஞ்சந:' உபாயாந்தர ப்ரவ்ருத்யநர்ஹ:, க்ஷேமம் கச்சேத்—மோக்ஷம் கச்சேத், என்பது பொருளாம். இங்கு மோக்ஷத்தை க்ஷேமசப்தத்தாலே பேசினர். அதற்கடி, நிஷ்க்ருஷ்டஸம்பந்த ஜ்ஞாநமடியாக உபாயாந்தர ப்ரவ்ருத் யநர்கதையாகிற ஆகிஞ்சந்யம் தலையெடுத்து ஈசுவரன் கை பார்த்திருந்து அவனுடைய விநியோகத்திற்காக ஏற்படும் மோக்ஷமே ஸ்வரூபாநுரூபமாய், மற்ற ஸாதநாநுஷ்டாநரூப ஸ்வப்ரவ்ருத்தி கொண்டு ஸ்வார்த்தா கந்தம் வீசப்பெறுவது மோக்ஷமேயாகிலும் ஸ்வரூப விருத்தமாயிருக்கையாம். ஸர்வகர்மங்களுமற்ற தேசமேயாகிலும், ஸங்கல்பவிசேஷத்தால் ஏற்பட்ட ருசிபேதமடியாகவந்த உத்தேசிய பேதநிபந்தந உபாஸநா ப்ரகார விசேஷத்தாலே கைவல்யம் வேறுபட்டிருக்கும். அநந்த கருட விஷ்வக்ஸேந ஸுதர்சன பாஞ்சஜந்யாதி லோகப்ராப்திபோல் பகவதநுபவபரரிலும் ஸ்வார்த்ததார்ஜ்ஞாநம் நடையாடுவார் சிலரும், அஃதொழியப்பெற்று பாரார்த்ததையே தலையெடுத்து அநுபவிப்பார் சிலருமாயிருப்பர்களென்று பெரியோர்கள் ப்ரமாணங்கொண்டு அறுதியிட்டிருப்பர்கள். ஸ்வார்த்த பாரார்த்தைகொண்டு பலபேதமிருந்தாலும் அநுபவகைங்கர்யங்களும், ஆநந்தமுமொத்திருக்கையாலே பரமஸாம்யாபத்தியைச் சுருதிசொல்லியது. இதனால், பாரார்த்தைக வேஷமான மோக்ஷமே ஸ்வரூபமென்றும், மற்றது ஸ்வரூப விருத்தமென்றுஞ் சொல்லத்தட்டில்லை.

ஆகையால் ஆழ்வார் எவ்வகையிலும் விலக்ஷணமே யாகிலும், எனக்காகத்தரும் மோக்ஷம் எனக்குத்தேவையில்லை; அவ்விடையாட்டான பேச்சும் இங்கு வேண்டியதில்லை என்று "எம்மா வீட்டுத்திறமும் செப்பம்" என்று ஸ்வார்த்தா கந்தம் நடையாடும் மோக்ஷத்தை நிஷேதித்து, "தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே, எனக்கே கண்ணனையான் கொள்சிறப்பே" என்று தனக்காக விநி

யோகங்கொள்ளவேண்டி அவன் தரும்மோக்ஷமே உத்தேசியம் என்று மோக்ஷ புருஷார்த்த மின்னபடியிருக்கவேண்டுமென்று நிர்ணயித்துக்காட்டினர்.

ஸாதநாநுஷ்டாநம் பண்ணும்போது 'மத்பலஸாதநத்வாத்ம தர்த்தமிதம்' என்கிற அபிமானம் நடையாடுமாகையால் பலத்தில் ஸ்வார்த்தாகந்கம் வீசும். அது, பரார்த்தைகவேஷமுடையார்க்கு துஸ்ஸஹமாயிருக்கும். ஹார்த்தமாக தேவதாந்தரகந்தம் ஸகியாத பாகம்பிறந்த ஒரு அதிகாரிக்கு யாத்ருச்சிகமாகத் தேவதாந்தராலய சமீபத்தில் உண்டாகும் தூபகந்தம் சர்த்தியை விளைக்குமென்பது அநுபவ வேத்யம். ப்ரயோஜநாந்தரபரரிட்ட துழாய்மணம் ஸஹியாது. அநந்யப்ரயோஜநரிட்ட துழாய் மணம்வேண்டி "மிக்கசீர்த் தொண்டரிட்ட பூந்துளவின் வாசமே, வண்டு கொண்டுவந்தூதுமாகில் என் திறம் பண்டுபண்டு போலொக்கும் கெண்டையொண் கண்டுயிலும்" என்று தன் நிலையைப்பேசினர் உளர். இதனல் ப்ரயோஜநாந்தரபரரிட்ட துழாய் மணம் ஸத்தாபாதகம். அநந்யப்பிரயோஜனரிட்ட துழாய் மணம் ஸத்தாதாரகம். அநந்யப்ரயோஜனருடைய தென்றும், ப்ரயோஜநாந்தரபரருடைய தென்றும் ஜ்ஞாநம் வேண்டா; தாரகமாயும் பாதகமாயுமிருக்கைக்கு என்பது விளங்கும். ஈசுவரன் சேதனசேதனங்களின் ஸத்தைநோக்கி ரக்ஷித்தும் நியமித்தும் போருவதெல்லாம் தனக்காகவே என்று உபநிஷத் பேசுமென்று பெரியார் பணித்தார். ஆகையால் ஸ்வார்த்ததை, ஸ்வரூப விருத்தம். பரார்த்ததை ஸ்வரூபத்திற்கிசைந்தது. இதைத்தான் ஆழ்வார் நிஷேதபூர்வகமாக நிர்ணயித்துக்காட்டினர். இப்படிப்பட்ட புருஷார்த்தம் ஸாதநாநுஷ்டானத்தாலே பெறக்கூடியதல்ல. நிஷ்க்ருஷ்ட சரீரசரீரிபாவ ஸம்பந்தமடியாகத் தலையெடுத்த ஆகிஞ்சந்யம் காரணமாய் அவன் கைபார்த்துப்போரும் மோக்ஷமே ஸ்வரூபாநுரூபமாகையாலே அப்படிப்பட்ட மோக்ஷத்தை க்ஷேமசப்தத்தாலே சொல்லப்பட்டது. ஆக சுகப்ரஹ்மருஷி ஈசுவரனுக்கும், இவனுக்கும் சரீரசரீரிபாவமுள்ளது. சரீரவாசக சப்தம் சரீரிவரையில் சொல்லுமாகையால் ஸர்வபதங்களும் பரமாத்மாவைச் சொல்லும். ஆதலால் ஸர்வவேதப்ரதிபாத்யன் ஈசுவரனுகத்தட்டில்லை; இப்படிப்பட்ட நிஷ்க்ருஷ்ட சரீரசரீரிபாவ ஜ்ஞாநம் வருமவனுக்கு

உபாயாந்தர ப்ரவ்ருத்யநர்கத்வம் தலையெடுத்து அதடியாக ஸ்வரூபாநுரூபமான மோக்ஷப்ராப்தியுமுண்டாகுமெனக் கூறிமுடித்தார்.

இதுமாத்திரமல்லாமல், இந்த வ்யுத்பத்தி காரணம் அருமைப்படுமென்பதையும், ஸாம்ப்ரதாயிகமென்பதையுந் தெரிவிக்கவேண்டி ஒரு ஐதிஹ்யத்தையும் காட்டினார். அதாவது முன்னொரு காலத்தில் வதரியாச்சிராமத்தில் நாராயணன் கலாபக்ராமவாஸிகளுடன் எழுந்தருளியிருக்குமளவில் ஸ்ரீநாரதர் எழுந்தருளி நீர் இப்போது என்னைக்கேட்ட ப்ரச்நத்தையே கேட்டார். நாராயணன் ஸ்தஸ்ஸர் வஜ்ஞனாயிருக்கவும் தன்னடியவரான பெரியாருக்குக் கௌரவத்தை நாட்டவேண்டி "ப்ருஹஸ்வாதிநோவதந்தி" "ப்ரஹ்மவாதிநோவதந்தி" என்று வேதஞ்சொல்வதுபோல, தானும் பெரியார் சொல்லும்படி இதுவாயிருக்குமென்று ஜநோலோகத்தில் ஸநகாதிகள்கூடி நிர்ணயித்த அர்த்தமிதுவெனக்கூறினார். அதாவது ஸநகாதிகள் ஜநோலோகத்தில் † ப்ரஹ்ம ஸத்ரம் நடத்தாநிற்க; அக்காலத்தில் இவ்வர்த்தம் பிரஸ்தாபிக்கலாயிற்று. அப்போது ஸநந்தனர் வக்தாவாயிருந்து சொல்லும்போது ஸ்ருஷ்டிக்கு ஆதியில் வேதபுருஷன், பரமாத்மாவை எழுப்பப்புகுந்து சுருதிகீதையெனப் பெயர் பெறும் இருபத்தெட்டு சுலோகங்களால் ஸ்தோத்திரம் செய்த ப்ரகாரத்தைக்காட்டி, அதில் வேதபுருஷன், சேதனாசேதனங்கள் ஈசுவர சரீரங்களாம் என்று பேசியிருப்பதை எடுத்துக்காட்டினார்; என்று நாராயணன் நாரதருக்குச் சொல்லிமுடித்தார்.

மேலும், ஸ்ரீசுகர், பரீக்ஷித்துக்கு ஸம்சயம் நடையாடாதபடி இவ்வர்த்தம் வேதாபிமதமாயும், ஆஸ்திகருக்கு உபாதேயதமமாயும், அநாதிஸித்தமாயும், ஸாம்ப்ரதாயிகமாயுமிருக்குமெனப் பேசிமுடித்தார். இதனால், சரீரசரீரிபாவாதி ஸம்பந்த ஜ்ஞாநத்தின் ஊற்றத்தால் ஆகிஞ்சந்யம் தலையெடுத்து, உபாயாந்தர ப்ரவ்ருத்தி

---

†ப்ரஹ்மஸத்ரமாவது ஜ்ஞாநாதிகர்கள் பலர்கூடி, ஒருவரை வக்தாவாக்கி, பகவத்குணங்களை உபந்யஸிக்கும்படிசெய்துமற்றவர்கள் அதைக்கேட்டு அநுபவித்துக்கொண்டிருப்பதாம். இப்பொழுது! நாலக்ஷேபமென்றும், குணாநுபவமென்றும் வழங்குவனவும் இதையே குறிப்பிடுவதாம்; என்று பெரியோர் பணிப்பர்.

யொழிந்து அவன் கைபார்த்திருப்பதே ஸித்தாந்தஸாரமெனக் கொள்வது பொருத்தமுடையதாகும். இங்ஙனம் இவ்விஷயம், விரிவின்றிப் பெரியார்பால் கேட்டபடி எழுதலாயிற்று.

காரப்பங்காடு, ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமியின்,
தமையனார் குமாரரும், அந்தேவாசியுமான
வேங்கடாசார்யர், சேரன்குளம்.

---

ஸ்ரீ:

## யக்ஷப்ரச்நம்.

(72-ம் பக்கத்தொடர்ச்சி.)

(உக) யக்ஷ:- 𑌕𑌾 𑌦𑌿𑌕𑍍𑌕𑌿𑌮𑍁𑌦𑌕𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌿𑌮𑌨𑍍𑌨𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌵𑍈 𑌵𑌿𑌷𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌸𑍍𑌯𑌕𑌾𑌲𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌹𑌿 𑌤𑌤𑌃 𑌪𑌿𑌬 𑌹𑌰𑌸𑍍𑌵 𑌚 ॥
காதிக்கிமுதகம் ப்ரோக்தம் கிமந்நம் கிஞ்சவை விஷம்
ச்ராத்தஸ்யகால மாக்யாஹிதத: பிபஹரஸ்வச.

(இ-ள்) அரசனே! நன்னெறியாவதெது? ஜலமாவதெது? அந்நமென்பது யாது? விஷமென்பதெது? ச்ராத்தத்துக்குக் காலமெது; சொல்வாயாக. அதன்பின்னர் ஜலத்தையெடுத்துப் பருகுவாயாக? எ-ம்.

தர்ம:- 𑌸𑌨𑍍𑌤𑍋 𑌦𑌿𑌗𑍍𑌜𑌲𑌮𑌾𑌕𑌾𑌶𑌂 𑌗𑍌𑌰𑌨𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑌾 𑌵𑌿𑌷𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌕𑌾𑌲𑌃 𑌕𑌥𑌂𑌵𑌾 𑌯𑌕𑍍𑌷𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 ॥
ஸந்தோ திக்ஜலமாகாசம் களரந்நம் ப்ரார்த்தநா விஷம்
ச்ராத்தஸ்ய ப்ராஹ்மண: கால: கதம்வா யக்ஷமந்யஸே.

---

(உக) இனி, லோபமுதலிய துர்க்குணங்களை யொழித்து, வேள்வி, ஈகைமுதலிய நற்கருமங்களைக் கைக்கொண்டு சமதமாதி ஸம்பத்தையும் பெற்ற ஒருவன் அறிந்து கொள்ளத்தக்கன இவை யென்பது ரைக்கப்படும்.

(இ-ள்.) 78 ஸத்துக்களே நன்னெறியாம். (79) ஜலமாவது ஆகாசமாம். (80) கோக்களே அந்நமாம். (81) ப்ரார்த்தனையே விஷமாம். (82) ச்ராத்தத்திற்கு ப்ராஹ்மணனே காலமாம். யக்ஷனே! நீ என்ன எண்ணுகிறாய் சொல்வாயாக; எ-ம்.

---

(78) ‘ஷிஶ த்தீதிஷிக:’ ‘திசதீதிதிக்’ என்ற வ்யுத்பத்தியினால் திக்என்ற சொல் நன்னெறியை உபதேசிக்கின்றவர்களை யுணர்த்தும். ஸத்துக்களென்றது வேதநெறியினின்றொழுகும் பெரியாரை. இப்பெரியார்கள் ஜீவன் ப்ரஹ்மஜ்ஞானத்தைப்பெற்று மோக்ஷமடைதற்கு இன்றியமையாத் துணையாயிருப்பாராதலால் ‘ஸத்துக்களே நன்னெறியாம்’ என்று சொல்லப்பட்டது. இதனால் ஸத்துக்களான ஆசிரியர்களின் உபதேசத்தினாலே ஆத்மஜ்ஞானத்தை யடையவேண்டுமென்பது பெறப்பட்டது.

(79) ஜலமென்றது இங்கு ஜீவனைக்குறித்து நின்றது. “வஞ்ச்யா மாஹுதாவாப:” “பஞ்சம்யாமாஹுதாவாப:” (ஜீவன் ஐந்தாவது ஆஹுதியில் ஜலத்தையடைகிறான்) என்று வேதத்திற் கூறப்பட்டபடி ஜலத்தை யதிஷ்டித்து நிற்கின்ற ஜீவனே இங்கு விஷயமாம்.

(80) “ஶச்ச்தீதி ஶாவ:” “கச்சதீதிகௌ:” என்ற வ்யுத்பத்தியால் கோசப்தம் இங்கு ப்ராக்ருதி தத்வங்களான கண் காது முதலிய இந்திரியங்களையும், அவற்றின் விஷயங்களான ஒளி ஓசை முதலியவற்றையு முணர்த்தும். அந்நம் என்பதற்கு “ஃஞம் யொஃம் ஃந்நம்” “அந்தும் யோக்யம் அந்நம்” என்ற வ்யுத்பத்தியால் உண்ணத்தக்கது; அஃதாவது நசிக்கும்படி செய்யத்தக்கது என்பது பொருளாம். ஜீவன் ப்ரஹ்ம ஸாயுஜ்யத்தைப் பெறுதற்குத் தடையாயிருக்கும் ப்ராக்ருதிகார்யமான இந்திரிய முதலியவைகளை நசிக்கும்படி செய்தே வீடுபெறவேண்டுமாதலால் ‘கோக்களே அந்நமாம்’ என்று சொல்லப்பட்டது. இதனால், ப்ராக்ருதி ஸம்பந்தத்தை ஒழித்தபின் ஜீவன் ப்ரஹ்ம ஸாயுஜ்யத்தை எளிதிற் பெறலாகுமென்பது பெறப்படும்.

(81) ப்ரார்த்தனை என்றது காமத்தை. காமத்தின் கார்யமாக ப்ரார்த்தனை (இரத்தல்) நிகழ்கின்றதினால் இங்குக் கார்யம் காரணமாக உபசரிக்கப்பட்டது. விஷம்போன்ற தன்மையுடையதை விஷமென்றதினால் விஷமென்பது உவமையாகு பெயராம். காமம், ஜன்ம மரணங்கட்கேதுவாய் நின்று விஷம்போற் சோகத்தை விளைப்பதாயிருக்குமாதலால் ‘ப்ரார்த்தனையே விஷமாம்’ என்று சொல்லப்பட்டது. இதனால் இத்தகைய காமத்தை ஒழித்து நல்லாசிரியனது உபதேசத்தால் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெறவேண்டுமென்பது பெறப்பட்டது.

(82) சிராத்தம் என்பது ச்ரத்தையோடு செய்யும் ஈதலைக்குறிக்கும். இங்குச் சிரத்தையோடு ஈதலாவது ஞானவிஷயமாக ஸதாசார்யனிடத்திற்

(உஉ) யக்ஷ:- 𑌤𑌪𑌃 𑌕𑌿𑌂𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑍋 𑌦𑌮𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃।
𑌕𑍍𑌷𑌮𑌾 𑌚 𑌕𑌾 𑌪𑌰𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌕𑌾 𑌚 𑌹𑍍𑌰𑍀𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾॥

தப: கிம்லக்ஷணம் ப்ரோக்தம் கோதமச்ச ப்ரகீர்த்தித:
க்ஷமாசகாபரா ப்ரோக்தா காச ஹ்ரீ: பரிகீர்த்திதா.

(இ-ள்.) தவத்தின் லக்ஷணம் யாது? தமம் என்று சொல்லப் படுவது எது? சிறந்த பொறுமையாவது யாது? நாணமென்று சொல்லப்படுவதெது? எ-ம்.

தர்ம:- 𑌤𑌪𑌃 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌂 𑌮𑌨𑌸𑍋 𑌦𑌮𑌨𑌂 𑌦𑌮𑌃।
𑌕𑍍𑌷𑌮𑌾 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑍁𑌤𑍍𑌵𑌂 𑌹𑍍𑌰𑍀𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑌂॥

தப: ஸ்வதர்ம வர்த்தித்வம் மநஸோ தமநம் தம:
க்ஷமாத்வந்த்வ ஸஹிஷ்ணுத்வம் ஹ்ரீரகார்ய நிவர்த்தநம்.

---

செய்யும் ஆத்ம ஸமர்ப்பணமாம். ப்ராம்ஹணன் என்றது இங்கு ப்ரஹ்ம ஜ்ஞாநநிஷ்டனன ஆத்மஜ்ஞாநியை. ஜீவனுக்கு வழிகாட்டியாய் நிற்கின்ற அவனைக் கண்டவிடத்து அதுவே நல்லகாலமென்று கருதி அப்போதே அவ னிடத்து ஆத்மஸமர்ப்பணஞ் செய்வதே ஜீவன் வீடுபெற்றுய்வதற்குக் காரண மாமாதலால் 'ச்ராத்தத்திற்கு ப்ராஹ்மணனே காலமாம்' என்று சொல்லப் பட்டது. ஆத்மஸமர்ப்பணமாவது ஆத்மா ஆசார்யனுக்கு அடிமையென்று இசைகையாம்.

இகனுல், ஆசார்யோபதேசத்தினுல் ப்ரஹ்மஜ்ஞாநத்தைப் பெறக்கூடு மென்பதும், ஜீவன் தனது உபாதியாகிய ப்ரக்ருதி ஸம்பந்தத்தை ஒழித்த பின்னரே அவன் ப்ரஹ்ம ஸாயுஜ்யத்தைப் பெறுவானென்பதும், அதைப் பெறுதற்கு ப்ரக்ருதி ஸம்பந்தமே தடையாயிருக்குமென்பதும், ஆசார்யோப தேசத்திற்குத் தடையாயிருக்கும் காமத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்ப தும், ஸதாசார்யனைக் கண்டபொழுதே அவனிடத்தில் ஆத்ம ஸமர்ப்பணஞ் செய்யவேண்டுமென்பதும் பெறப்பட்டன.

இத்துணையும் முமுக்ஷுவானஜீவன் பெறவேண்டுஞ் சாதனங்களையும், அவைகளைப்பெற்றபின் அறிந்துகொள்ள வேண்டுவனவற்றையும் முறையே கூறிமுடித்த யுதிஷ்டிரர், இவ்வளவாலும் திருப்தியடையாது மேலுஞ்சில விஷயங்களை வெளியிடவேண்டுமென்ற குறிப்போடுநின்ற யக்ஷனைநோக்கி 'நீ என்ன கருதுகின்றனை? இன்னும் கேட்பன உளவேல் கேட்பாயாக' என, யக்ஷன், இன்னும் வேறுசில வினுக்களைக் கேட்கத்தொடங்கினுன். அவை:—

(உஉ) இங்கு, முன்பு ஞானஸாதனங்களாகக் கூறப்பட்ட தவமுதலிய வைகட்கு இரண்டு சுலோகங்களால் இலக்கணமுரைக்கப்படுகிறது.

(இ-ள்.) 83 தவமாவது தனக்குரிய தர்மத்திலே நிற்றலாம் (84) மனத்தைச் சிக்ஷிப்பதே தமமாம். (85) (நன்மை தீமை என்பனபோல வழங்கப்படுகிற) இரட்டையைப் பொறுப்பதே சிறந்த பொறுமையாம். (86) செய்யத்தகாதவற்றை விலக்குவதே நாணமாம்; எ-ம்.

(உக) யக்ஷ:- 𑌕𑌿𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌕𑌃 𑌶𑌮𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌤𑌃 ।
𑌦𑌯𑌾 𑌚 𑌕𑌾 𑌪𑌰𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌕𑌿𑌂𑌚𑌾𑌰𑍍𑌜𑌵 𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌂 ॥
கிம்ஜ்ஞாநம் ப்ரோச்யதே ராஜந்க: சமச்ச ப்ரகீர்த்தித:
தயாசகா பராப்ரோக்தா கிஞ்சார்ஜவ முதாஹ்ருதம்.

(இ-ள்.) அரசனே! ஜ்ஞாநம் என்பது எது? சமம் என்பது எது? சிறந்ததயையாவது யாது? நேர்மை என்பது எது? எ-ம்.

தர்ம:- 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌸𑌂𑌬𑍋𑌧𑌃 𑌶𑌮𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌤𑌾 ।
𑌦𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵 𑌸𑍁𑌖𑍈𑌷𑌿𑌤𑍍𑌵𑌮𑌾𑌰𑍍𑌜𑌵𑌂 𑌸𑌮𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑌾 ॥

---

(83) ஜாதி விபாகங்களும், அவற்றிற்குரிய ஒழுக்கங்களும் ஈசுவரனாலே வகுக்கப்பட்டன. ஆதலால் எவரும் தத்தம் வருணத்திற்கும், ஆச்ரமத்திற்கும் தக்கவாறு ஒழுகுவதே அவரது கடமையாகும். இங்ஙனம் ஒழுகுவரேல் ஈசுவரனது ஆஜ்ஞையை நிறைவேற்றியவராய் அவனதருள்பெற்று வாழ்தற்குரியவராவர். ஆதலால் 'தவமாவது தனக்குரிய தர்மத்திலே நிற்றலாம்' என்று சொல்லப்பட்டது.

(84) தமமாவது புறக்கரணவடக்கமாம். அது, அந்தக்கரணமாகிய மனவடக்கமின்றிச் சித்தியாதாதலால் 'மனத்தைச் சிக்ஷிப்பதே தமமாம்' என்றுரைக்கப்பட்டது.

(85) இரட்டையாவன இன்பம் துன்பம் நன்மை தீமை முதலியனவாம். இவற்றைச் சகித்தலாவது இவைகளைச் சமமாகக்கருதுவதாம். அஃதாவது இன்பம் வந்துற்றபோது மகிழ்வதும், துன்பம் வந்துற்றபோது துக்கிப்பதும் செய்யாது இவற்றை ஒருநிகரனவாக எண்ணுவதாம்.

(86) பெரியோர்கட்கு நாணமாவது இழிந்தகருமங்காரணமாக நாணுவதாம். "கருமத்தா னாணுத னாணுத் திருநுதல், நல்லவர் நாணுப் பிற" என்று திருக்குறளில் நன்மக்கணாணுவது இழிந்தகருமங்காரணமாக நாணுதல். அஃதன்றி மனமொழி மெய்களது ஒடுக்கத்தான் வருவனவோவெனின், அவை அவாளவல்ல, அழகிய நுதலினையுடைய குலமகளிர் நாண்கள் என்று சொல்லப்பட்டுளதும் இங்கறியத்தக்கது.

(உக) ஜ்ஞாநம் முதலியவற்றின் உண்மையுரைக்கப்படுகிறது.

ஜ்ஞாநம் தத்வார்த்தஸம்போத: சமச்சித்த ப்ரசாந்ததா
தயா ஸர்வ ஸுகைஷித்வம் ஆர்ஜவம் ஸமசித்ததா.

(இ-ள்.) 87 ஜ்ஞாநமாவது மெய்ப்பொருளை யுணர்த்துவதாம். (88) சமமாவது சித்தமொடுங்குதலாம். (89) தயையாவது எல்லா உயிரும் இன்புற விரும்புவதாம். (90) நேர்மையாவது ஸமபாவனை யாம்; எ-ம்.

(உ.ச) பக்ஷ:- [illegible]
[illegible] ॥

க:சத்ருர்துர்ஜப: பும்ஸாம் கச்ச வ்யாதிரநந்தக:
கீத்ருசச்ச ஸ்மிருத: ஸாதுரஸாது: கீத்ருச: ஸம்ருத:.

(இ-ள்.) மானிடர்க்கு வெல்லமுடியாத பகை எது? முடிவற்ற நோய் எது? ஸாதுவென்பவன் எத்தன்மையினன்? அஸாதுவென்பவன் எவ்வியல்பினன்? எ-ம்.

தொடரும்.

---

(87) மெய்ப்பொருளை யுணர்தலாவது "[illegible]" "ஸத்யம் ஜ்ஞாநமந்தம் ப்ரஹ்ம" என்று சுருதியிலுரைக்கப்பட்ட ஸர்வேசுவரனை யுள்ளவாறறிவதாம். "ஒண்டொடியாள்கேள்வன் ஒருவனையே நோக்குமுணர்வு" என்பதும் ஈண்டறியத்தக்கது.

(88) சித்தமொடுங்குதலாவது அந்தக்கரணங்களடங்குதலாம். அந்தக்கரணங்களாவன—மனம் சித்தம் புத்தி அகங்காரங்களாம். இதர விஷயங்களைப்பற்றிச் செல்கின்ற சித்தத்தை அங்ஙனம் சொல்லவொட்டாமல் தடுப்பதே சமமாகும்.

(89) "[illegible]" "தயந்தே ரக்ஷந்த்யநயே திதயா" என்ற வ்யுத்பத்தியினால் எல்லா வுயிரையும் ரக்ஷிப்பதற்கு எது வாவதெதுவோ அதுவே தயையென்று கொள்ளத்தக்கது. அஃதாவது எவ்வுயிரும் துன்புறுவதைச் சகியாமல் எல்லாம் இன்புற்று வாழவேண்டுமென்ற எண்ணமாம். அதனால் 'தயையாவது எல்லாவுயிரும் இன்புற விரும்புவதாம்' என்று சொல்லப்பட்டது.

(90) ஸமபாவனையாவது பகை நட்பு, நன்மைதீமை, விருப்புவெறுப்பு என்பனவற்றை ஒரு நிகரனவாகக்கருதுவதாம். இன்பம்துன்பம், பகை நட்பு முதலியனவெல்லாம் வினைப்பயனால் விளைவனவாம் என்று இவற்றில் ஸமபுத்திவைப்பதே நன்மையாகும்.

(உச) இனி, அருளுடையவன் விடத்தக்க கெட்ட குணங்கள் இவையென்பதிற்குரைக்கப்படுகின்றன.